[1973 ஆகஸ்ட் 4

சென்னைத் துறைமுகத்திற்குப் புதிய கலங்கரை விளக்கு

* 17. வினு—திரு. அ. தேவேந்திரன் :
திரு. என். டென்னிஸ் :
திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னைத் துறைமுகத்திற்குப் புதிய கலங்கரை விளக்கு அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டம் தொடங்கப்பட்டு விட்டது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, இதற்காகும் செலவை மாநில அரசு ஏற்கிறதா அல்லது மத்திய அரசு ஏற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசுதான் ஏற்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் புதிய கலங்கரை விளக்கு அமைப்பதற்கு அவசியம் என்ன? இது எத்தனை கோடி செலவிலே கட்டப்படுகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இருந்த பழைய கலங்கரை விளக்கத்தில் சில சேதாரங்கள் ஏற்பட்டுள்ளதுடன், கொடி இயல் சாதனமும் மிகப் பழமையானதாக உள்ளது. காலத்திற்கேற்றவாறு புதுமையான மாறுதல் செய்ய வேண்டுமென்று புதிய கலங்கரை விளக்கு ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு செலவு கோடிக்கணக்கில் அல்ல. இலட்சக்கணக்கில், ரூ. 29 இலட்சம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஹைகோர்ட்டிலே ஒரு லைட் ஹவுஸ் ஏற்கனவே இருக்கிறது. அதைப் பொதுமக்கள் பார்க்க வருகிறார்கள். இதனுல் வருமானம் வேறு வருகிறது கோர்ட்டுக்கு. இப்பொழுது புதிதாக லைட் ஹவுஸ் கட்டினுல் ஹைகோர்ட்டுக்கு வருகிற வருமானம் கெட்டுப் போய்விடுமே, ஆகவே, பழையது

1973 ஆகஸ்ட் 4]

இருக்கும்போது புதிதாக அமைப்பதற்கு வேண்டிய அவசியம் என்ன? இப்பொழுதுள்ளது இதுவரை பழையதாகவில்லையென்று கருதுகிறேன். காரணம், மக்கள் எல்லோரும் போய்க்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, திடீரென்று புதியதை அமைப்பதற்கான அவசியம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM: The dome has developed some cracks and the optical defect was noticed in this old Light-house. This is a very old Light-house which needs modernisation. We are fitting electric lift in this new Light House.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இந்தக் கலங்கரை விளக்கு கட்ட வேண்டுமென்கிற எண்ணம் இந்த அரசுக்கு ஏற்பட்டு செயல்படுத்துகின்றதா, அல்லது மத்திய அரசு விரும்பி இந்தக் காரியத்தைச் செய்கின்றதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மத்திய அரசு விரும்பித்தான் இந்தக் காரியம் நடைபெறுகிறது.

Boat service in Cooum.

* 18. Q.—THIRU N. DENNIS
THIRU K. A. WAHAB Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the right to operate boat services at the Cooum has been leased out to private parties; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம். கூவம் ஆற்றில் உல்லாசப் படகுகள் விடும் உரிமை, ஈராண்டுக் காலத்திற்குப் பூனா, திருவாளர்கள் தெர்மோரோர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகை எடுத்த நிறுவனம் அரசுக்கு ஆண்டுதோறும் இருக்கை ஒன்றுக்கு ரூ. 60 வீதம் தொகை செலுத்தும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அரசு நேரடியாக நடத்துவதன்மூலம் அதிக வருமானம் கிடைக்கும் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.